IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR
O.S. No. 280/2017

Deposition of DW2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on **03.12.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | ராமமூர்த்தி | **Caste** | : | |
| **S/o.** | **:** | குல்லுசாமி | **Calling** | : | |
| **Village** | **:** | | **Religion** | : | |
| **Taluk** | **:** | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் இந்த வழக்கில் மூன்றாம் நபர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணமான உயில் ஆவணம் முனியப்ப கவுண்டரால் எழுதப்பட்டதாகும். மேற்படி ஆவணத்தில் நான் இரண்டாவதாக சாட்சி கையொப்பமிட்டுள்ளேன். மேற்படி சாட்சி கையொப்பம் **பி.வா.சா.ஆ.27** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தில் முனியப்ப கவுண்டர் கையொப்பமிட்டதை நான் பார்த்தேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சியமளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் அழைப்பாணை வரவில்லை. சாட்சியமளிக்க என்னை யார் அழைத்து வந்தார் என்றால் முனுசாமி என்னை அழைத்து வந்தார். உயிலை எழுதி வைத்த முனிய கவுண்டர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் அவரது மகளை நான் திருமணம் செய்துள்ளேன். அவர் எனக்கு மாமனார் முறை ஆகும். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் முனிய கவுண்டர் எனது மாமனார் என்று

குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இருதரப்பினரையும் தெரியும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் உறவினர் என்று என்னுடைய முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் என்னுடன் சேர்ந்து மற்றொரு சாட்சி எனது தகப்பனார் என்றால் சரிதான். எனது தகப்பனார் உயிருடன் உள்ளாரா என்றால் அவர் 10 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் இறப்பு சான்றிதழ் இல்லை. பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் நான் ஒரு கையொப்பம் தான் போட்டேன். மேற்படி கையொப்பத்தை பத்திரம் எழுதிய இடத்தில் தான் போட்டேன். மேற்படி உயில் ஆவணத்தில் குறிப்பிட்டு சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொத்துக்களின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் மொத்தம் 2 ஏக்கர் ஆகும். நான் சொல்வது தவறு என்றும் மேற்படி ஆவணத்தில் வேறு உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் சர்வே எண் திருத்தப்பட்டு பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி திருத்தம் எப்போது செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உயிலை எழுதியதாக சொல்லப்படும் நபருக்கு மொத்தம் மூன்று மகன்கள் என்றால் சரிதான். மேற்படி நபரின் முதன் மனைவியின் மகன்கள் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் மேற்படி முனியப்ப கவுண்டரின் இரண்டாவது மனைவியின் மகளை நான் திருமணம் செய்துள்ளேன். நான் எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரமான முனியப்ப கவுண்டர் உயில் ஆவணம் எழுதியபோது நல்ல உடல் ஆரோக்கியத்துடனும், நல்ல சிந்தனையுடனும் யாருடைய தூண்டுதலும் இன்றி எழுதியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றும் மேற்படி விவரம் தவறானது என்றும் உயில் ஆவணத்தை எழுதுவதற்கு நானும் எனது தகப்பனாரும் முனியப்ப கவுண்டரை தூண்டினோம் என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் பற்றி தெரிந்து கொண்டு தான் நான் சாட்சி

கையொப்பமிட்டேனா என்றால் மேற்படி விவரங்களை ஓரளவிற்கு தெரிந்து கொண்டுதான் சாட்சி கையொப்பமிட்டேன். உயிலில் கண்ட சொத்து முனியப்ப கவுண்டருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் கடந்த 1986 ம் வருடத்தில் ஏற்பட்ட பாகக்கறார் பத்திரத்தின் படி முனியப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி பாகக்கறார் பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனாஎ ன்றால் படித்து பார்க்கவில்லை. எனக்கு 1985 ம் வருடத்தில் திருமணமானது. மேற்படி பாகம் ஏற்பட்ட பிறகு முனியப்ப கவுண்டருக்கு பிரிந்த சொத்தை அவருடன் சேர்ந்து முனியப்ப கவுண்டரின் மூன்று மகன்களும் ஒன்றாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும் முனியப்ப கவுண்டர் இறந்துவிட்டால் சொத்தை மூன்றாக பிரிக்க வேண்டும் என்ற காரணத்தினால் நாங்கள் ஒன்றாக சேர்ந்து தவறான உயில் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. அந்த காரணத்தினால்தான் மூன்றாம் நபர்கள் யாரும் சாட்சி கையொப்பமிடாமல் மருமகனான நானும், சம்மந்தியான எனது தகப்பனாரும் சேர்ந்து சாட்சி கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2017 ம் வருடத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் எனது மாமியார் சின்னதாய் இறந்தார் என்றால் சரிதான். உயில் ஆவணம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னதாகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டு முனியப்ப கவுண்டரின் மகன்கள் மூவருமான வாதிகள் இருவரும் மற்றும் 5 ஆம் பிரதிவாதியும் சேர்ந்து இதுநாள் வரை தாவா சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணமான உயில் ஆவணத்தை நாங்கள் சென்ற பிறகு தான் விவரம் கூறி தட்டச்சு செய்தார்கள். மேற்படி ஆவணத்தை யார் தட்டச்சு செய்தார்கள் என்றால் கணேசன் என்பவரின் அலுவலகத்தில் பணிபுரியும் ஒரு பெண் தட்டச்சு செய்தார். மேற்படி தட்டச்சு செய்தவர் கையொப்பமிட்டாரா என்றால் அதை நான் பார்க்கவில்லை. கணேசன் என்பவர் கையொப்பமிட்டார். பி.வா.சா.ஆ.1 ஆவணம் என்பது 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக நானும் எனது தகப்பனாரும் சேர்ந்து முனியப்ப கவுண்டரை தூண்டிவிட்டு அவரிடமிருந்து சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் வாதிகள் மற்றும் 5 ஆம் பிரதிவாதியின் கூட்டு சுவாதீன

அனுபவத்தில்தான் இதுநாள் வரை இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் மேற்படி சொத்தில் 2/3 பாகம் கேட்டு வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை தூண்டுதலின் பேரில் தயார் செய்த காரணத்தினால்தான் மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து பற்றியும் ஆவணத்தை தட்டச்சு செய்த நபர் கையொப்பமிட்டாரா என்ற விவரம் பற்றியும் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. நானும் எனது தகப்பனாரும் மேற்படி ஆவணத்தில் எத்தனை கையொப்பம் செய்தோம் என்றால் நான் ஒரு கையொப்பமும், எனது தகப்பனார் ஒரு கையொப்பமும் செய்தோம்.

**மறுவிசாரணை - இல்லை**

ஒம்/–ராமமூர்த்தி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டுர்.